23.08.2016

தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

### மேட்டூர் அணையின் நீர்மட்டம் 2 அடி உயர்வு

காவிரியின் நீர்ப் பிடிப்புப் பகுதிகளில் பெய்துவரும் மழையின் காரணமாக, மேட்டூர் அணையின் நீர்மட்டம் மூன்று நாள்களில் 2 அடி உயர்ந்துள்ளது.

காவிரியின் நீர்ப் பிடிப்புப் பகுதிகளில் கடந்த சில தினங்களாக பருவ மழை பெய்து வருவதால், மேட்டூர் அணைக்கு நீர்வரத்து படிப்படியாக அதிகரித்து வருகிறது. தொடர்ந்து நீர்வரத்து அதிகரித்து வருவதால், கடந்த வெள்ளிக்கிழமை 64.41 அடியாக இருந்த மேட்டூர் அணையின் நீர்மட்டம், திங்கள்கிழமை காலை 66.26 அடியாக உயர்ந்துள்ளது. மூன்று நாள்களில் அணையின் நீர் மட்டம் 1.85 அடி உயர்ந்துள்ளது.

திங்கள்கிழமை காலை மேட்டூர் அணைக்கு நொடிக்கு 7,988 கன அடி வீதம் தண்ணீர் வந்து கொண்டிருந்தது. அணையிலிருந்து குடிநீர்த் தேவைக்காக நொடிக்கு 500 கன அடி வீதம் தண்ணீர் திறக்கப்பட்டிருந்தது. அணையின் நீர் இருப்பு 29.57 டி.எம்.சி.

# காட்டுமன்னார்கோவில் பகுதியில் இயந்திர நெல் நடவு



காட்டுமன்னார்கோவில் பகுதியில் வேளாண் அலுவலர்கள் ஆலோசனையின் பேரில் விவசாயிகள் இயந்திர நடவு மேற்கொண்டுள்ளனர்.

காட்டுமன்னார்கோவில் பகுதியில் காவிரி நீரை பயன்படுத்தி வடவாறு, வடக்கு ராஜன் வாய்க்கால், வீராணம் ஏரி ஆகியவற்றின் மூலம் விவசாயப் பணிகள் நடைபெறுகின்றன.

கடந்த சில ஆண்டுகளாக காவிரி நீர் சரிவர கிடைக்காததால் விவசாயம் பெரிதும் பாதிக்கப்பட்டு வருகிறது.

இதை கருத்தில் கொண்டு வேளாண்மை துறை சார்பில், செம்மை நெல் சாகுபடி எனக் கூறப்படும் ஒற்றை நாற்று முறையில் அறிமுகப்படுத்தி இயந்திரம் மூலம் விவசாயிகள் நடவுப் பணி மேற்கொண்டு வருகின்றனர்.

இந்த முறையில் தண்ணீர் குறைந்த அளவே தேவைப்படும். மேலும், விதை நெல்லும் குறைவு.

ஒரு ஏக்கர் நடவு செய்ய 10 கிலோ விதை நெல் போதுமானது. ஆள்கள் தேவையும் அதிகம் இல்லை. மகசூல் அதிகம் கிடைக்கும். இம்முறையில் அரசு மானியம் வழங்கி வருகிறது. தற்போது மேட்டூரில் நீர்மட்டம் குறைவாக உள்ளது. இதன்

காரணமாக சம்பா சாகுபடியும் பாதிக்கப்படும் சூழல் நிலவி வருகிறது. இதைக் கருத்தில் கொண்டு தமிழக முதல்வர் இயந்திர நடவு செய்யும் விவசாயிகளுக்கு ஊக்கத்தொகை வழங்கப்படும் என அறிவித்துள்ளார். இதையடுத்து, ஆழ் குழாய்க் கிணறு வைத்திருப்பவர்கள் இயந்திர நடவு செய்ய அதிகாரிகளின் ஆலோசனையுடன் ட்ரேக்களில் விதை விடும் பணியை தொடங்கியுள்ளனர்.

காட்டுமன்னார்கோவில் அருகே மா.ஆதனூர் கிராமத்தில் விவசாயிகள் நெல் சாகுபடி செய்ய விதை விடும் பணியை தொடங்கியுள்ளனர்.

## குறிஞ்சிப்பாடி வட்டத்தில் கம்பு விளைச்சல் அமோகம்: விவசாயிகள் மகிழ்ச்சி



குறிஞ்சிப்பாடி ஒன்றியத்துக்கு உள்பட்ட கிராமங்களில் பயிரிடப்பட்டுள்ள கம்பு நன்கு வளர்ந்து விளைச்சல் அதிகரித்துள்ளதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

குறிஞ்சிப்பாடி ஒன்றியத்தில் குறிஞ்சிப்பாடி, கீழூர், ஆடூர் அகரம், பொன்வெளி, இருப்பாச்சி, வெங்கடாம்பேட்டை, கோ.சத்திரம், அன்னதானம்பேட்டை,

பாச்சாரப்பாளையம், ராசாக்குப்பம் உள்ளிட்ட 30-க்கும் மேற்பட்ட கிராமங்கள் உள்ளன. இங்கு சுமார் 1,400 ஹெக்டேர் பரப்பில் கம்பு பயிரிடப்பட்டுள்ளது. விதைப்புக்குப் பிறகு அவ்வப்போது இடைவெளிவிட்டு பெய்த மழையால், போதுமான தண்ணீர் கிடைத்ததை அடுத்து, பயிர்கள் நன்கு வளர்ந்து செழித்த கதிர்களுடன் காணப்படுகிறது.

இன்னும் சில நாள்களில் அறுவடைக்குத் தயாராகி விடும் நிலையில் உள்ளதால், இந்தாண்டு கூடுதல் மகசூல் கிடைக்கும் என விவசாயிகள் தெரிவித்தனர். இதுகுறித்து, குறிஞ்சிப்பாடி உழவர் மன்றத் தலைவர் ஆர்.கே.ராமலிங்கம் கூறியது:

குறிஞ்சிப்பாடி வட்டத்தில் அதிக அளவு கம்பு பயிரிடப்பட்டுள்ளது. சீரான இடைவெளியில் அவ்வப்போது மழை பெய்ததால் செழித்து வளர்ந்துள்ளது. இது விவசாயிகளிடையே மகிழ்ச்சியை ஏற்படுத்தி இருக்கிறது. தற்போது, வீரிய ரக கம்பு ஒரு மூட்டை (100 கிலோ) ரூ.1,400 முதல் 1,500 வரையிலும், நாட்டு கம்பு சுமார் ரூ.2,100 வரையிலும் விலை போகிறது. இருப்பினும் போதுமான விலை கிடைக்க வேண்டும் எனக் கூறினார்.

குறிஞ்சிப்பாடி வேளாண் உதவி இயக்குநர் ஜெ.ஏழுமலை கூறியது: கம்பு ஒரு ஏக்கருக்கு சுமார் 17 முதல் 20 மூட்டைகள் வரை மகசூல் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. மொத்தத்தில் இம்முறை, முந்திரி, பலா விளைச்சலுடன் கம்பு விளைச்சலும் சிறப்பாக இருப்பதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர் என்றார்.

## எந்திர நடவுக்கான பின்னேற்பு மானியம் பெற அழைப்பு

நாகை மாவட்டத்தில் நெல் நடவு இயந்திரமயமாக்கலுக்கான பின்னேற்பு மானியம் பெற விண்ணப்பிக்கலாம் என மாவட்ட நிர்வாகம் சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து மாவட்ட நிர்வாகம் வெளியிட்ட செய்தி:

விவசாயிகள் பாய் நாற்றாங்கால் அமைத்து, வேளாண்மை பொறியியல் துறை அல்லது தொடக்க வேளாண் கூட்டுறவு வங்கி அல்லது தனியார் நிறுவனங்கள் ஆகியவற்றின் மூலமாக நடவு இயந்திரங்களைப் பயன்படுத்தி நடவுப் பணி

மேற்கொள்ளும் விவசாயிகள், நடவுப்பணி மேற்கொண்ட பின்னர் அதற்கான பட்டியல், புகைப்படங்கள், சிட்டா அடங்கல், விவசாயிகளின் ஒருங்கிணைந்த கையேட்டு எண், வங்கிக் கணக்கு எண் அல்லது ஆதார் எண் விவரங்களுடன் பகுதி உதவி வேளாண்மை அலுவலர் அல்லது வட்டார வேளாண்மை விரிவாக்க மைய வேளாண்மை உதவி இயக்குநரை அணுகி விண்ணப்பத்தை சமர்ப்பித்து, நெல் நடவு இயந்திரமயமாக்கலுக்கான பின்னேற்பு மானியம் ரூ.5,000(ஹெக்டேருக்கு) பெற்றுக் கொள்ளலாம்.

இதில், அதிகபட்சமாக ஒரு விவசாயிக்கு 2 ஹெக்டேருக்கான மானியம் மட்டுமே வழங்கப்படும். விவசாயிகள் தங்கள் மானியத்தை விரைவாக பெறுவதற்கு மகாத்மா காந்தி தேசிய ஊரக வளர்ச்சி திட்டத்தின்கீழ் வழங்கப்படும் வங்கி கணக்கை தவிர்க்க வேண்டும்.

தேசிய வேளாண் வளர்ச்சி திட்டத்தின் கீழ் இயந்திர நடவு மேற்கொள்ளும் விவசாயிகளுக்கு நாற்றுகள் தயார் செய்து இயந்திரம் மூலம் நடவு பணி மேற்கொள்ள நாற்றங்கால் தட்டுகள் 50 சதவீத மானியத்தில் வழங்க இலக்கு பெறப்பட்டுள்ளது. இந்த நர்சரி தட்டுகள் தேவைப்படும் விவசாயிகள் தங்கள் பகுதி வேளாண்மை உதவி அலுவலர்களையோ அல்லது வேளாண்மை உதவி இயக்குநர்களையோ அணுகி தங்களுக்கு தேவைப்படும் நாற்றங்கால் தட்டுகளை பெற்று பயன்பெறலாம் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பூண்டு விலை இரட்டிப்பாக உயர்வு: நீலகிரி விவசாயிகள் மகிழ்ச்சி

மேட்டுப்பாளையம் வெள்ளைப்பூண்டு மொத்த விற்பனை மார்க்கெட்டில், பூண்டு விலை இரட்டிப்பாக உயர்ந்துள்ளதால், நீலகிரி பகுதி விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

நீலகிரியில் விளையும் உருளைக்கிழங்கு, கோஸ், காரட், பீன்ஸ் மற்றும் பூண்டு உள்ளிட்ட காய்கறி வகைகளுக்கு சிறந்த விற்பனைக் கேந்திரமாக மேட்டுப்பாளையம் விளங்குகிறது. இங்கு ஏலம் மூலம் விற்பனை செய்யப்படும் பூண்டு மற்றும் மலைக் காய்கறிகள் லாரிகள் மூலம் வெளியூர்களுக்கு அனுப்பிவைக்கப்படுகின்றன.

மேட்டுப்பாளையத்தில், மலைக் காய்கறிகள் தினந்தோறும் ஏலம் மூலமாக விற்பனை செய்யப்படுகின்றன. பூண்டு வகைகள் வாரம் ஒருமுறை ஞாயிற்றுக்கிழமை மட்டும் ஏலம் மூலமாக விற்கப்படுகின்றன.

இந்த வாரம் நடைபெற்ற பூண்டு ஏலம் குறித்து மேட்டுப்பாளையம் வெள்ளைப் பூண்டு வியாபாரிகள் சங்கத் தலைவர் என்.எஸ்.வி.ஆறுமுகம் கூறியதாவது:

ஜூன் முதல் அக்டோபர் வரை பூண்டு சீசன் இருக்கும். நீலகிரி குண்டல்பேட், திம்பம் மலைப் பகுதிகளிலிருந்து மேட்டுப்பாளையத்துக்கு வரும் பூண்டுகளை அதன் வீரியம் காரணமாக ராஜஸ்தான், மத்தியப் பிரதேசம் ஆகிய மாநிலங்களைச் சேர்ந்த விவசாயிகள், தங்கள் பகுதியில் பயிரிடுவதற்காக விதைப் பூண்டுகளாக வாங்கிச் செல்கிறார்கள். ஹிமாசலப் பிரதேசம் பகுதியிலிருந்து வரும் பூண்டை பொதுமக்களின் சமையல் தேவைக்கென வியாபாரிகள் பெரிதும் விரும்பி வாங்கிச் செல்கிறார்கள்.

மேட்டுப்பாளையத்தில் ஞாயிற்றுக்கிழமை (ஆகஸ்ட் 21) நடைபெற்ற ஏலத்துக்கு தாம்பட்டி, பாலாடா, ஆடாசோலை, சின்னகுன்னூர், தொரையட்டி உள்பட உதகை சுற்றுப்புற பகுதிகளிலிருந்தும், குண்டல்பேட், திம்பம் மலைப் பகுதியிலிருந்தும் 19,000 மூட்டை விதைப் பூண்டுகள் விற்பனைக்குக் கொண்டுவரப்பட்டிருந்தன. இதில், ஒரு கிலோ பூண்டு ரூ.100 முதல் 270 வரை விற்பனையானது. கடந்த ஆண்டு சீசன் துவக்கத்தில் பூண்டு சராசரியாக 10,000 மூட்டைகள் வரை விற்பனைக்கு கொண்டுவரப்பட்டு, ஒரு கிலோ பூண்டு ரூ. 140 வரை மட்டுமே விற்பனை ஆனது.

தற்போது, இந்த சீசனில் ஒரு கிலோ பூண்டு ரூ. 270-வரை விற்பனையானதால், இரட்டிப்பு விலை காரணமாக நீலகிரி விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

அதேபோல், ஹிமாசலப் பிரதேசத்தில் இருந்து வரும் நாட்டுப் பூண்டு 1,000 மூட்டைகள் வரை கொண்டுவரப்பட்டன. இதில், ஒரு கிலோ பூண்டு ரூ. 100 முதல் 150 வரை விற்பனை ஆனது. இந்த வகை பூண்டு கடந்த சீசனில் ரூ. 80 முதல் 120 வரை விற்பனை ஆனது. இந்த நாட்டுப் பூண்டை ஈரோடு, சேலம், திருப்பூர், கோவை உள்பட தமிழகத்தின் பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த வியாபாரி களும், கேரள வியாபாரிகளும் அதிக அளவில் வாங்கிச் சென்றனர். பூண்டு சீசன் வரும்

அக்டோபர் வரை தொடரும் என்பதால், அதுவரை இதே விலை நீடிக்க வாய்ப்புள்ளது என்றார்.

## மீன் வளர்ப்புக் குளங்கள் அமைக்க விண்ணப்பிக்கலாம்

தேசிய வேளாண் அபிவிருத்தி திட்டத்தின் கீழ் மீன் வளர்ப்புக் குளங்கள் அமைக்க விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது.

இது குறித்து ஆட்சியர் த.ந.ஹரிஹரன் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு:

தேசிய வேளாண் அபிவிருத்தி திட்டத்தின் ஒரு ஹெக்டேரில் ரூ. 5 லட்சம் செலவில் மீன் வளர்ப்புக் குளங்கள் அமைக்க, அதிகபட்சமாக ரூ. 2 லட்சமும், மீன் குஞ்சுகள் வாங்குவதற்கு ரூ. 10 ஆயிரமும் பின் நிலை மானியமாக வழங்கப்படும்.

மீன் வளர்ப்புக் குளங்கள் புதிதாக அமைக்க விரும்பும் பயனாளிகள் சொந்த நிலம் அல்லது பத்து ஆண்டுகளுக்கு குத்தகை பெற்ற நிலம் வைத்திருக்க வேண்டும். இத்திட்டத்தின் கீழ் பயன் பெற விவசாயிகள், முன்னுரிமை மற்றும் தகுதிகளின் அடிப்படையில் தேர்வுசெய்யப்படுவார்கள்.

இத்திட்டத்தின் கீழ் பயன்பெற விரும்புவோர் மீன் வளத் துறை உதவி இயக்குநர் அலுவலகத்தினை நேரில் தொடர்பு கொண்டு உரிய விண்ணப்ப படிவம் பெற்று உரிய ஆவணங்களுடன் விண்ணப்பிக்க வேண்டும். மேலும் விவரங்களுக்கு மீன் வள உதவி இயக்குநர், எஸ்.வி.காம்ளெக்ஸ், 2-ஆவது தளம், வீரப்பம்பாளையம் பிரிவு, பெருந்துறை சாலை, திண்டல், ஈரோடு என்ற முகவரியிலும், 0424-2271912 என்ற தொலைபேசி எண்ணிலும் தொடர்புகொள்ளலாம்.

## ஓணம் பண்டிகை: வாழைக்காய் விலை அதிகரிப்பு

ஓணம் பண்டிகையை முன்னிட்டு, மேட்டுப்பாளையம் ஏல மையத்தில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற ஏலத்தில் வாழைக்காய் விலை அதிகரித்து காணப்பட்டது.

இந்த ஏல மையத்தில் வாரந்தோறும் ஞாயிறு மற்றும் புதன்கிழமை வாழைக்காய் ஏலம் நடைபெறும். இந்நிலையில், ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற ஏலத்துக்கு,

மேட்டுப்பாளையம், சத்தி, பவானிசாகர், நெல்லித்துறை, தேக்கம்பட்டி, ஓடந்துறை உள்ளிட்ட பகுதிகளில் இருந்து விவசாயிகள் பங்கேற்றனர்.

ஏலம் குறித்து ஏல மைய நிர்வாகிகள் வெள்ளிங்கிரி, சின்னராஜ் கூறியது:

இந்த வாரம் நடைபெற்ற ஏலத்தில் அனைத்து வகைகளையும் சேர்த்து மொத்தம் 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட தார்கள் விற்பனைக்கு வந்தன. கடந்த வாரத்தை விட 4,000 தார்கள் அதிகமாக கொண்டு வரப்பட்டன.

இதில் கதளி மற்றும் நேந்திரம் கிலோ ரூ. 58-60 வரையும், பூவன் தார் ஒன்று ரூ 500-850 வரையும், ரோபஸ்டா ரூ. 400-600 வரையும், செவ்வாழை ரூ. 900-1,050 வரையும், ரஸ்தாளி ரூ. 350-700 வரையும், தேன் வாழை ரூ. 400-700 வரையும், மொந்தன் ரூ. 200-400 வரையும் விற்பனை செய்யப்பட்டது.

கடந்த வாரத்தை விட கிலோவுக்கு ரூ. 2-4 வரையும், தார் ஒன்றுக்கு ரூ. 20-40 வரையும் விலை அதிகரித்துள்ளது. இதனால் வாழை விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். ஓணம் பண்டிகையையொட்டி, கேரள பகுதி விவசாயிகள் அதிக அளவில் ஏலத்தில் பங்கேற்று வாழை கொள்முதல் செய்ததாக தெரிவித்தனர்.

## சேவூரில் ரூ. 6 லட்சத்துக்கு நிலக்கடலை ஏலம்

சேவூர் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் திங்கள்கிழமை நடைபெற்ற நிலக்கடலை ஏலத்தில் வரத்து அதிகரித்து ரூ. 6 லட்சத்துக்கு வர்த்தகம் நடைபெற்றது.

சேவூர் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் இந்த வாரம் நடைபெற்ற ஏலத்தில் வரத்து அதிகரித்து, 301 மூட்டைகள் வந்திருந்தன. குவிண்டால் ஒன்றுக்கு முதல் ரக நிலக்கடலை ரூ. 4,450 முதல் ரூ. 4,900 வரையிலும், இரண்டாவது ரகம் ரூ. 5,100 முதல் ரூ. 5,850 வரையிலும், மூன்றாம் ரகம் ரூ. 5,900 முதல் ரூ. 6,080 வரையிலும் ஏலம் போனது. மொத்தம் ரூ. 6 லட்சத்துக்கு ஏலம் நடைபெற்றது.

இந்த ஏலத்தில், திருப்பூர், தாராபுரம், அவிநாசி, அன்னூர், புளியம்பட்டி, சேவூர், நம்பியூர், கோபி உள்ளிட்ட பகுதிகளில் இருந்து 18 விவசாயிகளும், 6 வியாபாரிகளும் பங்கேற்றனர்.

## பரமத்திவேலூர் ஏலச் சந்தையில் வெற்றிலை விலை சரிவு

பரமக்தி வேலூர் வெற்றிலை ஏலச் சந்தையில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற ஏலத்தில் வெற்றிலைகள் குறைந்த விலைக்கு ஏலம் போனது.

பரமத்தி வேலூர் சுற்று வட்டாரப் பகுதிகளான பாண்டமங்கலம், பொத்தனூர், வேலூர், அனிச்சம்பாளையம், குப்புச்சிப்பாளையம், நன்செய் இடையாறு, பாலப்பட்டி உள்ளிட்ட பகுதிகளில் ஏராளமான ஏக்கரில் வெற்றிலை பயிர் செய்யப்பட்டுள்ளது.

இங்கு விளையும் வெற்றிலைகள் வெளி மாவட்ட, மாநிலங்களுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

கடந்த வாரம் நடைபெற்ற ஏலத்தில் வெள்ளைக்கொடி வெற்றிலை (இளம்பயிர் மார்) 104 கவுளி கொண்ட சுமை ஒன்று ரூ.7 ஆயிரத்துக்கும், கற்பூரி வெற்றிலை (இளம்பயிர் மார்) சுமை ஒன்று ரூ.2 ஆயிரத்துக்கும் ஏலம் போனது. ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற ஏலத்தில் வெள்ளைக்கொடி வெற்றிலை (இளம்பயிர் மார்) 104 கவுளி கொண்ட சுமை ஒன்று ரூ. 6,500-க்கும்,கற்பூரி வெற்றிலை (இளம்பயிர் மார்) சுமை ஒன்று ரூ.1,500-க்கும் ஏலம் போனது. விஷேச காலங்கள் அதிகம் இல்லாததால் விலை சரிவடைந்துள்ளதாக விவசாயிகள் தெரிவித்தனர்.

தினமலர்

### இன்றைய வேளாண் செய்திகள்

## இறால்களின் தலைநகர்

இறால் பண்ணைகள் அமைத்தால் கடற்கரையோர விளை நிலங்கள் உவர்நிலங்களாக மாறுகின்றன என இறால் பண்ணை எதிர்ப்பு இயக்கங்கள் ஒரு புறமும், உற்பத்தி மறுபுறமும்

நடைபெறுகின்றன. 50க்கும் மேற்பட்ட இறால் வகைகள் இந்தியாவில் உற்பத்தியாகின்றன.

அதிகமாக அந்நியச் செலாவணியை ஈட்டித்தரும் இந்த இறால்களை வளர்க்க அரசு ஊக்குவிக்கிறது. இந்தியாவில் மீன் உற்பத்தியில் முதலிடம் வகிக்கும் ஆந்திரப்பிரதேசம் தான், இறால் உற்பத்தியில் முதலிடம் வகிக்கிறது. புலி இறால் வகை, இண்டிகாஸ் இறால், பானாஸ் மோனோடோன்ஸ் என வகை வகையான இறால் உற்பத்தியில் முன்னணி வகிக்கும் நெல்லூர் மாவட்டம் இந்தியாவின் இறால்களின் தலைநகராக உள்ளது.

### விவசாயிகள் குறை தீர்க்கும் கூட்டம்

கிருஷ்ணகிரி: 'கிருஷ்ணகிரி மாவட்ட விவசாயிகள் குறை தீர்க்கும் கூட்டம், வரும், 26ம் தேதி நடக்கிறது' என, கலெக்டர் கதிரவன் தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கை: கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உள்ள விவசாயிகளின் குறை தீர்க்கும் கூட்டம், வரும், 26ம் தேதி காலை, 11 மணிக்கு, கிருஷ்ணகிரி கலெக்டர் அலுவலக கூட்டரங்கில் நடக்கிறது. கூட்டத்தில், வேளாண் துறை மற்றும் தோட்டக்கலை துறை உட்பட அனைத்து துறை உயர் அதிகாரிகளும் பங்கேற்கின்றனர். எனவே, விவசாயிகள் இந்த கூட்டத்தில் தங்களது குறைகளை தெரிவித்து நிவர்த்தி செய்து கொள்ளலாம். இவ்வாறு தெரிவித்துள்ளார்.

### ஈரோட்டில் கொட்டியது கனமழை

ஈரோடு: ஈரோட்டில், நேற்று ஒரு மணி நேரம் கனமழை கொட்டியது.

ஈரோட்டில், கடந்த சில நாட்களாக, கோடை போல் வெயில் கொளுத்தியது. பகல் நேரத்தில் வெளியில் செல்லவே மக்கள் தயங்கினர். அதே சமயம் மாலை வேளையில் மழைக்கான அறிகுறி ஏற்படும். ஆனால் மழை வருவதில்லை. நேற்று முன்தினம் லேசான தூரலுடன் நின்றது. இந்நிலையில் நேற்று காலை முதல் மேகமூட்டமாகவும், மழைக்கான வெக்கையும் நீடித்தது. மாலை, 4.50 மணிக்கு பலத்த மழை பெய்யத் தொடங்கியது. ஒரு மணி நேரம் கொட்டித் தீர்த்தது. மழையுடன் அவ்வப்போது மின்னல், இடியும் காணப்பட்டது. மழை நின்ற பிறகும் குளிர் காற்று வீசியது. இரவு முழுவதும் வானம் மேகமூட்டமாக காணப்பட்டது. இதனால் இதமான சூழல் ஏற்பட்டது.

விபத்தில் சிக்கிய பஸ்: மழை பெய்தபோது, ஈரோடு ஏ.இ.டி., பள்ளி பஸ், 15 மாணவர்களுடன், ஈரோடு-மேட்டூர் சாலையில் டீச்சர்ஸ் காலனி நோக்கி சென்றது. பாதாள சாக்கடைக்காக சாலையில் தோண்டப்பட்டிருந்த குழியில், பஸ் டயர் சிக்கியது. இதனால் மேற்கொண்டு செல்ல முடியவில்லை. சாய்ந்தபடி பஸ் நின்றதால் பரபரப்பு ஏற்பட்டது. ஆனாலும், யாருக்கும் காயம் ஏற்படவில்லை. சிறிது நேர போராட்டத்துக்குப்பின், மண், கல்லை குவித்து, பஸ்?ஸ நகர்த்தி சென்றனர். இதனால், சிறிது நேரம் போக்குவரத்து பாதித்தது. இதேபோல் பெருந்துறை டவுன், சீனாபுரம், துடுப்பதி, விஜயமங்கலம் ஆகிய இடங்களில் நேற்று மதியம், 3 மணியளவில் மழை பெய்யத் தொடங்கியது. தூரலாகவும், கனமாகவும், 5.30 மணி வரை நீடித்தது. இதனால், கடந்த சில வாரங்களாக வாட்டி வதைத்த வெப்பத்தின் கொடுமை தணிந்து குளிர்ச்சி நிலவியது. மக்கள் மகிழ்ச்சி அடைந்தனர்.

* மொடக்குறிச்சி வட்டாரத்தில் நேற்று மாலை, 4.30 மணிக்கு மழை பெய்யத் தொடங்கியது. மழையின்போது அரச்சலூர் அரசு பள்ளி மாணவியர், பள்ளி விட்டு வந்தனர். பஸ் ஸ்டாப்பில் நிழற்கூடம் இல்லாததால், மழையில் நனைந்த படி, பஸ்சுக்காக நீண்ட நேரம் காத்திருந்தனர்.

**சின்ன வெங்காய அறுவடை தீவிரம்: விலை சரிவால் இருப்பு வைக்க முடிவு**

மொடக்குறிச்சி: மொடக்குறிச்சி வட்டாரத்தில், அறுவடைப் பணிகள் தீவிரமடைந்த நிலையில், சின்ன வெங்காயம் விலை சரிந்தது. எனவே, வெங்காயத்தை இருப்பு வைக்க விவசாயிகள் முடிவு செய்துள்ளனர்.

இதுகுறித்து, விவசாயி பழனிமுத்து கூறியதாவது: மொடக்குறிச்சி மற்றும் கொடுமுடி வட்டாரத்தில் விவசாயிகள் பலரும் சின்ன வெங்காயம் பயிரிட்டுள்ளனர். சிலர் மஞ்சளில் ஊடுபயிராகவும் நடவு செய்துள்ளனர். தற்போது இப்பகுதியில், சின்ன வெங்காய அறுவடை பணிகள் தீவிரமாக நடந்து வருகிறது. கடந்த மூன்று மாதங்களாக, சின்ன வெங்காயத்தின் விலையில் சரிவு ஏற்பட்டதால் விவசாயிகள் கவலையடைந்துள்ளனர். காரணம் நாமக்கல், அரியலூர், பெரம்பலூர் உட்பட, பல மாவட்டங்களில், உற்பத்தி அதிகளவில் உள்ளது. இதனால்,

நடப்பாண்டு சின்ன வெங்காயம் விளைவித்த விவசாயிகளுக்கு, மிகுந்த நஷ்டம் ஏற்பட்டுள்ளது. எனவே, ஸ்டாக் வைத்திருந்து விற்பனை செய்ய முடிவெடுத்துள்ளோம். பரண் அமைத்து ஸ்டாக் வைத்தால், நான்கு அல்லது ஐந்து மாதங்களுக்குப் பின் உபயோகிக்கலாம். அதன்பிறகு விலை ஏறும் என, நம்பிக்கை உள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.

## 26ல் வேளாண் குறைதீர் கூட்டம்

ஈரோடு: ஈரோடு மாவட்ட வேளாண் குறைதீர் நாள் கூட்டம் வரும், 26ம் தேதி கலெக்டர் அலுவலக வளர்ச்சி மன்ற கூட்ட அரங்கில், கலெக்டர் பிரபாகர் தலைமையில் நடக்க உள்ளது. காலை, 11 முதல், 11.30 மணி வரை மனுக்கள் பெறுதலும், 11.30 முதல், 12.30 மணி வரை விவசாய சங்க பிரதிநிதிகள் விவசாயம் தொடர்பான பிரச்னைகள், கருத்துக்களை தெரிவிப்பதும், மதியம், 12.30 முதல், 1.30 மணி வரை அலுவலர்கள் விளக்கம் தெரிவிக்கின்றனர். இதில் பங்கேற்க விவசாயிகளுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

## பயறு உற்பத்தியை அதிகரிக்க செயல் விளக்க திடல் வேளாண் அதிகாரி தகவல்

திண்டுக்கல்: 'திண்டுக்கல்லில் பயறு உற்பத்தியை அதிகரிக்க விவசாயிகள் செயல் விளக்க திடல் அமைக்கலாம்' என, வேளாண் இணை இயக்குனர் தங்கசாமி ஆலோசனை வழங்கினார்.

அவர் தெரிவித்ததாவது: உளுந்து, துவரை, தட்டைப் பயறு உள்ளிட்ட பயறு வகைகளின் உற்பத்தி குறைந்து வருவதால், பருப்பு விலை தினமும் அதிகரித்து வருகிறது. இதை தடுக்க, புதிய தொழில் நுட்பத்தை பயன்படுத்த அரசு உத்தரவிட்டுள்ளது. இதற்காக தேசிய வேளாண் வளர்ச்சி திட்டத்தின் கீழ், செயல் விளக்க திடல் அமைக்க விவசாயிகளுக்கு ஆலோசனை வழங்கியுள்ளது.

1,800 எக்டேர் இலக்கு: திண்டுக்கல்லில் 1,800 எக்டேரில் பயறு செயல்விளக்க திடல் அமைக்க இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. இதன்படி, ஒரு எக்டேரில்

செயல்விளக்க திடல் அமைக்கும் விவசாயிகளுக்கு சான்றளிக்கப்பட்ட விதைகள், உயிர், நுண்ணூட்ட உரம், களைக் கொல்லி மருந்து, இடுபொருள்கள் இலவசமாக வழங்கப்படும்.

மேலும், பயறு செடிகள் வளர, பூக்கள் உதிர்வதை தடுக்க தேவையான டி.ஏ.பி., கரைசலுக்கு 50 சதவீதம் மானியம் வழங்கப்படும். செடிகளில் நோய் தாக்குதலை தடுக்க, தரமான பயறுகளை உற்பத்தி செய்ய விவசாயிகளுக்கு தொழில் நுட்ப ஆலோசனை வழங்கப்படும். ஆர்வமுள்ள விவசாயிகள் வட்டார வேளாண் உதவி இயக்குனர் அலுவலகத்தில் பெயரை பதிவு செய்யலாம் என, தெரிவித்தார்.

## முருங்கை விவசாயிகளுக்கு இலவச உரம் விநியோகம் தினமலர் செய்தி எதிரொலி

குஜிலியம்பாறை: ஆர்.வெள்ளோடு மற்றும் ஆலம்பாடி ஊராட்சியில், தோட்டக்கலைத்துறை சார்பில் 50 விவசாயிகள் தேர்வு செய்யப்பட்டு, முருங்கை சாகுபடி செய்யும் வகையில் மானிய உதவிகள் செய்யப்பட்டன.

ஒரு விவசாயிக்கு ஒரு எக்டேர் முருங்கை நடவு செய்ய ரூ.11 ஆயிரத்து 250 வழங்கப்பட்டது. முருங்கை மரங்கள் நன்கு வளர்ந்து, காய் பிடிக்கும் தருணத்தில் பூச்சி தாக்குதலுக்குள்ளானது. அதன்பின், உரம் மற்றும் பூச்சி மருந்துகளை தோட்டக்கலைத்துறை சப்ளை செய்யவில்லை என விவசாயிகள் புகார் தெரிவித்தனர்.

இது குறித்த செய்தி தினமலர் நாளிதழில் வெளியானது. உடனடியாக ஒரு விவசாயிக்கு இரண்டு மூடை 19.19.19 உரம் மற்றும் மருந்துகள் வழங்கப்பட்டன.

ஆர்.வெள்ளோடு விவசாயி ராமசாமி கூறுகையில், தினமலர் நாளிதழில் செய்தி வெளியானதும் எல்லா விவசாயிகளுக்கும் உரம், பூச்சி மருந்துகள் இலவசமாக வழங்கப்பட்டன. தற்போது அவற்றை பயன்படுத்தி வருகிறோம், என்றார்.

## ஒட்டன்சத்திரம் மார்க்கெட்டில் வாழைக்காய் வரத்து அதிகரிப்பு

ஒட்டன்சத்திரம்: ஒட்டன்சத்திரம் மார்க்கெட்டில் வாழைக்காய் வரத்து அதிகரித்துள்ளது.

ஒட்டன்சத்திரம் மற்றும் சுற்றியுள்ள கிராமப்பகுதிகளில் தக்காளி, முருங்கை, வெங்காயம் உள்ளிட்ட காய்கறிகள் அதிகமாக பயிரிடப்படுகிறது. அதே நேரத்தில் வாழை நடவு மிகவும் குறைவாக உள்ளது. வத்தலக்குண்டு, சோழவந்தான் உட்பட

பல பகுதிகளில் விளைந்த வாழைக்காய் தினமும் மார்க்கெட்டிற்கு விற்பனைக்கு கொண்டு வரப்படுகிறது.

வாழை அறுவடை சீசன் என்பதால், மார்க்கெட்டிற்கு வரத்து ஒரு மடங்கு அதிகரித்துள்ளது. இந்த காய்களை கேரள வியாபாரிகள் அதிக அளவு வாங்கிச் செல்கின்றனர். தமிழக வியாபாரிகள் சிறிதளவே கொள்முதல் செய்கின்றனர். தற்போது ஒரு கிலோ வாழைக்காய் ரூ.21 க்கு விற்கிறது. இதேபோல் முருங்கை கிலோ ரூ.8 க்கும், வெண்டைக்காய் ரூ.5 க்கும் விற்பனையாவது. பல காய்களின் விலை குறைவாக விற்பதால் விவசாயிகள் பாதிப்படைந்துள்ளனர்.

## குறைந்தவிலை இடுபொருள் விற்பனை துவக்கம்

குஜிலியம்பாறை: வளம் குன்றா உழவர் உற்பத்தியாளர் நிறுவனம் சார்பில், முருங்கை விவசாயிகளுக்கான இடுபொருட்கள் குறைந்த விலையில் வழங்கும் வேளாண் ஆலோசனை மையம் துவக்க விழா நடந்தது.

குஜிலியம்பாறை ஒன்றிய வளம் குன்றா உழவர் உற்பத்தியாளர் அமைப்பின் தலைவர் கோபால்சாமி தலைமை வகித்தார். நபார்டு உதவி பொது மேலாளர் சஞ்சீவி முன்னிலை வகித்தார்.

கனரா வங்கி உதவி பொது மேலாளர் மணிவண்ணன் விவசாயிகளுக்கு இடுபொருள் விற்பனை மையத்தை துவக்கி வைத்தார். இங்கு விவசாயிகளுக்கு உரம், பூச்சி மருந்து, முருங்கை உள்ளிட்ட விதைகள் குறைந்த விலையில் வழங்கப்படும்.

விற்பனையை துணை இயக்குநர் மனோகரன் துவக்கி வைத்தார். குஜிலிம்பாறை ஒன்றிய விவசாயிகள் 620 பேருக்கு தலா ரூ.ஆயிரம் மதிப்பிலான பங்கு பத்திரம் வழங்கப்பட்டது.

கோட்டாநத்தம் கனரா வங்கி சார்பில் ரூ.20 லட்சம் கடன் உதவிகள் வழங்கப்பட்டன. தலைமை செயல் அலுவலர் மகேந்திரன், முருங்கை விவசாயி ராமசாமி பங்கேற்றனர்.

## மாற்றுப்பயிர் சாகுபடி குறித்து அமைப்பாளர்களுக்கு பயிற்சி

குளித்தலை: தண்ணீர்பள்ளி வேளாண் உதவி இயக்குனர் அலுவலகத்தில், மாற்றுப்பயிர் சாகுபடி குறித்த பயிற்சி முகாம் நடந்தது. கரூர் மாவட்டம், குளித்தலை அடுத்த தண்ணீர்பள்ளி வேளாண்மை உதவி இயக்குனர் அலுவலகத்தில் மாற்றுப்பயிர் சாகுபடி குறித்து, வட்டார உழவர் பயிற்சி அமைப்பாளர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது. வேளாண்மை உதவி இயக்குனர்

கைலாசபதி, பயிற்சி மையத்தின் வேளாண் அதிகாரி மகாலட்சுமி முன்னிலை வகித்தனர். இதில், புழுதேரி வேளாண் அறிவியல் மைய முதுநிலை விஞ்ஞானி திரவியம், குறைந்தளவு தண்ணீரை பயன்படுத்தி, என்னென்ன பயிர்கள் சாகுபடி செய்யலாம் என்பது குறித்து ஆலோசனைகளை வழங்கினார். உழவர் பயிற்சி அமைப்பாளர் அன்பில் தர்மலிங்கம், வேளாண் கல்லூரி மாணவியர் பங்கேற்றனர்.

## 10 ஏக்கரில் நெல் நடவு பணி தீவிரம்

காடையாம்பட்டி: தொடர் மழையால், டேனிஷ்பேட்டை அரசு விதைப்பண்ணையில், பத்து ஏக்கரில், நெல் நடவு பணி தீவிரம் அடைந்துள்ளது. சேலம், காடையாம்பட்டி தாலுகா, டேனிஷ்பேட்டையில், 96.4 ஏக்கரில், அரசு விதைப்பண்ணை உள்ளது. அதில், 70.7 ஏக்கரில், விதை நேர்த்திக்காக சோளம், கம்பு, ராகி, துவரை போன்ற வேளாண் விளைபொருட்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. சில மாதங்களாக, சேர்வராயன் மலைப்பகுதி, அடிவாரப்பகுதியில், மழை பெய்து வருவதால், மேற்கு சரபங்கா ஆற்றில் வரும் மழைநீரால், அங்குள்ள நீர் நிலைகளில் தண்ணீர் மட்டம் உயர்ந்துள்ளது. அதை தொடர்ந்து, ஏரிக்கு நீர்வரத்து வந்த வண்ணம் உள்ளதால், டேனிஷ்பேட்டை ஏரி, பெத்தேல் பிரிவு அருகே உள்ள ஏரிகளில், நீர் ததும்பிய நிலையில் உள்ளது. மழை காரணமாக, அரசு விதைப்பண்ணையில், 10 ஏக்கர் பரப்பளவில், கோ-51 ரக நெல் நடவு செய்யப்பட்டுள்ளது. 110 நாட்களில் அறுவடைக்கு தயாராகிவிடும்.

## இயற்கை வேளாண் அபிவிருத்தி பயிற்சி

மல்லசமுக்கிரம்: மல்லசமுக்கிரம் வட்டாரம், கருமனூர் கிராமக்கில், வேளாண்மைத்துறை மற்றும் பெங்களூர் மண்டல இயற்கை வேளாண்மை மையத்தின் சார்பாக, இயற்கை வேளாண்மை பற்றிய பயிற்சி விவசாயிகளுக்கு வழங்கப்பட்டது. மல்லசமுத்திரம் வேளாண்மை உதவி இயக்குநர் சண்முகம், பயிற்சியின் நோக்கம் மற்றும் இயற்கை வேளாண்மையின் அவசியம் குறித்து பேசினார். மண்டல இயற்கை வேளாண்மை மையத்தின் செயல்பாடுகள், இயற்கை உரங்கள், உயிர் உரங்கள், இயற்கை பூச்சி விரட்டிகள், பஞ்சகவ்யா மற்றும் ஒருங்கிணைந்த வேளாண்மை குறித்து முனைவர் ஜெயந்த் ராமன் விவசாயிகளுக்கு பயிற்சி அளித்தார். நாமக்கல் வேளாண்மை கல்லூரி முனைவர் அழகுதுரை,

மண்வளம், மண்புழு வளாப்பு, பசுந்தாள் உரங்களின் பயன்பாடுகள், பொறிப்பயிர்கள், இயற்கை இரை விழுங்கிகள் மற்றும் பண்ணை கழிவுகளை பயனுள்ளதாக மாற்றும் முறைகள் பற்றி விளக்கினார்.

**மீன் வளர்ப்பு குளங்களுக்கு மானியம்: விருப்பம் உள்ளவர் விண்ணப்பிக்க அழைப்பு**

நாமக்கல்: 'ஒரு ஹெக்டேரில் மீன் வளர்ப்பு குளங்கள் அமைக்க மானியம் வழங்கப்படுகிறது' என, நாமக்கல் கலெக்டர் ஆசியா மரியம் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து, அவர் வெளியிட்ட அறிக்கை: தேசிய வேளாண் அபிவிருத்தி திட்டத்தில், ஒரு ஹெக்டேரில், ஐந்து லட்சம் ரூபாய் செலவில், சொந்த நிலத்தில், மீன் வளர்ப்பு குளங்கள் அமைப்பவர்களுக்கு, அதிகபட்சமாக, ஒரு ஹெக்டேருக்கு, இரண்டு லட்சம் ரூபாய் மற்றும் மீன் குஞ்சுகள் வாங்குவதற்கு, 10 ஆயிரம் ரூபாய் என, மொத்தம், 2.10 லட்சம் ரூபாய் மானியமாக அளிக்கப்படும். இதற்கான விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. மீன் வளர்ப்பு குளங்கள் புதியதாக அமைக்க, பயனாளி சொந்த நிலம் அல்லது, 10 ஆண்டு குத்தகைக்கு பெற்ற நிலம் வைத்திருக்க வேண்டும்.விருப்பம் உள்ளவர்கள், மேட்டூர் அணையில் உள்ள மீன் வள உதவி அலுவலகத்துக்கு, நேரில் சென்று, விண்ணப்ப படிவம் பெற்று, உரிய ஆவணங்களுடன் விண்ணபிக்க வேண்டும். மேலும், 04298 - 244 045 என்ற தொலைபேசி எண்ணிலும் தொடர்பு கொள்ளலாம். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

தினகரன்

## இன்றைய வேளாண் செய்திகள்

### மஞ்சள் விலை உயர்கிறது

கோவை,: கோவை ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் நேற்று மாலை நடந்த மஞ்சள் ஏலத்தில் கடந்த 2 வாரங்களாக விலை உயர்ந்து வருகிறது. கடந்த வாரத்தை விட குவின்டாலுக்கு ரூ.950 வரை உயர்ந்துள்ளது.மஞ்சள் ஏலத்தில் விரலி ரகம் 120 குவின்டால், கிழங்கு ரகம் 50 குவின்டால் என மொத்தம் 170 குவின்டால் விற்பனையானது. தொண்டாமுத்தூர், நாதகவுண்டன்புதூர், செம்மேடு பகுதியை சேர்ந்த விவசாயிகள் விற்பனைக்கு கொண்டு வந்திருந்தனர்.இதை கோவை, பொள்ளாச்சி, விருதுநகர் பகுதியை சேர்ந்த வியாபாரிகள் கொள்முதல் செய்தனர்.விரலி மஞ்சள், குவின்டால் ரூ9,399 முதல் ரூ.9,599 வரை விற்றது. இதன் சராசரி விலை ரூ.9,450. விற்பனை மதிப்பு ரூ.11.34 லட்சம். கிழங்கு மஞ்சள் குவின்டால் ரூ.8,599 முதல் ரூ.8,699 வரை விற்றது. இதன் சராசரி விலை ரூ.8,650. விற்பனை மதிப்பு ரூ.4.32 லட்சம். இரண்டு ரகமும் சேர்ந்து ரூ.15.66 லட்சத்திற்கு விற்றது.

### வரகு பயிரிட்டால் கூடுதல் வரவு வேளாண்துறை ஆலோசனை

பழநி, : வரகு பயிரிடும் விவசாயிகளுக்கு கோ 3, ஏ.பி.கே 1 ஆகியவை ஏற்ற ரகங்கள் ஆகும். மரக்கலப்பை கொண்டு 2 முறை நன்கு ஆழமாக உழுது நிலத்தை சமன் செய்ய வேண்டும். அசோஸ்பைரில்லம் 600 கிராம் மற்றும் பாஸ்போ பாக்டீரியா 600 கிராம் கலந்து விதை நேர்த்தி செய்து பின், விதைப்பு செய்ய வேண்டும். கை விதைப்பு முறைக்கு ஹெக்டேருக்கு 12.5 கிலோ விதை பயன்படுத்த வேண்டும். விதைப்பான் கொண்டு வரிசை விதைப்பு செய்தால் ஹெக்டேருக்கு 10 கிலோ விதை பயன்படுத்த வேண்டும்.

வரிசைக்கு வரிசை 22.5 செண்டிமீட்டர் * 10 செண்டிமீட்டர் இடைவெளியும் இருக்க வேண்டும். ஒரு ஹெக்டேர் நிலத்தில் 12.5 டன் மக்கிய தொழு உரத்தை கடைசி உழவின்போது பரப்பி, பின் உழ வேண்டும். தொழு உரத்துடன் 10 பொட்டலங்கள் அசோஸ்பைரில்லம் மற்றும் 10 பொட்டலங்கள் பாஸ்ப்போபாக்டீரியா ஆகிய நன்மை தரும் உயிர் உரங்களை சேர்மம்து இடலாம். ஹெக்டேருக்கு முறையே 44:22 கிலோ தழை மற்றும் மணிச்சத்துக்களை இட வேண்டும். பயிர் விதைத்த 15ம் நாள் ஒரு முறையும், 40 நாள் ஒரு முறையும் கைக் களை எடுக்க வேண்டும்.

களை எடுத்தவுடன் வரிசைக்கு வரிசை 22.5 செண்டிமீட்டர் மற்றும் செடிக்கு செடி 10 செண்டிமீட்டர் இடைவெளியில் பயிர்களைக் களைக்க வேண்டும். விதையின் மூலம் கதிர்கரிப்பூர்டை நோயை தடுக்க ஒரு கிலோ விதைக்கு 2 கிராம் மேன்கோசெப் (அ) குளோரோதலோனிலை கலந்து விதை நேர்த்தி செய்ய வேண்டும். நோய் எதிர்ப்பு இரகமான கோ 3ஐ பயிரிடலாம். கதிர்கள் நன்கு காய்ந்து முற்றிய பிறகு அறுவடை செய்து தானியங்களைப் பிரித்தெடுக்க வேண்டும். பிறகு இவற்றை நன்றாக காயவைத்து, சுத்தம் செய்து சேமித்து வைக்க வேண்டும்.

**கோமாரி நோய்க்கு தடுப்பூசி**

ராமநாதபுரம், : ராமநாதபுரம் மாவட்டத்தில் கால்நடைகளை தாக்கும் கோமாரி நோயினை கட்டுப்படுத்த இதுவரை 10 சுற்றுகளில் தடுப்பூசி பணிகள் மேற்கொள்ளப்பட்டது. 11வது சுற்றாக வருகிற செப்.1 முதல் செப்.21ம் தேதி வரை 3 வாரங்கள் தடுப்பு மருந்துகள் அளிக்கப்பட உள்ளது. கால்நடை வளர்ப்பவர்கள் தங்களை கால்நடைகளை தடுப்பூசி மேற்கொள்ளப்படும் இடங்களுக்கு சென்று தடுப்பூசி போட்டு பயன்பெறலாம் என கலெக்டர் நடராஜன் தெரிவித்தார்.